முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் தருமர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

23.01.2019, புதன்கிழமை

1. **தரும பலம் கொண்ட அரங்கா**
**தரணி காத்தருளும் தேசிகா**
**கருமவினை சேரா மக்களை**
**கருணைபட உருவாக்கும் குருராசா**

2. **அரசனே உன் பெருமை கூறி**
**அகிலமதில் ஒளி சூட்சும நூலை**
**தெரிவிப்பேன் விளம்பி கலை திங்கள்**
**தேசிகனுக்கு நவதிகதி கணக்கன் வாரம்**

3. **வாரமதில் ஆழ்வார்களை தொடர்ந்து**
**வழங்கிடுவோம் பஞ்சபாண்டவர்களுள்**
**தருமர் யானும் உலகநலம் வேண்டி**
தாமுரைப்பேன் அறம் வளர்க்கும் பூமியே

4. பூமியே இயற்கை அழிவில்லா
புதுமையும் பசுமையும் வளமும்
நேமமுடன் ஞான பூமியாக மாறும்
நிலமதனில் சைவநெறியாம் அரங்கன் நெறி

5. நெறியே உண்மை ஆன்மீக ஞான
நேசமிக்க ஞானிகள் நெறியை
வருமுலகில் ஏற்று உலக மக்கள்
வல்லமைமிக்க அரங்க ஞானியை

6. ஞானியை ஏற்று பின்தொடர
ஞாலமதில் சர்வபலம் கிட்டும்
ஞானிகள் துணைபட மக்களுக்கு
நம்பிக்கை நன்னடத்தை நற்செயல் எனும்

7. எனும் உயர்நிலைகள் பெருகி
ஏழாம் படை வீட்டை தொடருபவர்கள்
வானவர் வியக்க உயருவர்
வரம்பல கண்டு தேறுவர்

8. தேற்றம் பெற தெய்வ பலமுற
தினமும் ஞானிகள் பூஜை செய்து
ஆற்றல் தரும் அன்னதானமதில்
அனைவரும் இயன்ற பொருளுதவி செய்து

9. செய்துமே எல்லா திக்கிலும்
சிறப்பான தருமம் வளர்த்து
அய்யமிலா வழிபாட்டின் நெறியை
அலட்சியம் காட்டா தொடர

10. தொடரவே தன்னார்வ தொண்டு பெருகி
தொண்டர்கள் படையும் விரிந்து
தடைகள் என்பது இல்லா மாற்றமும்
தயவு சிறந்த ஞான சேவையும்

11. சேவையும் விரிந்து வளர்ந்து
செப்பிடுவேன் ஞானிகள் ஆகும் வாய்ப்பு
புவனத்தில் யாவர்க்கும் கிட்டும்
புண்ணியம் மூலம் ஞானயுகம் அமையும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் தருமர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

எல்லையில்லா தருமபலம் கொண்டிட்ட அரங்கமகா தேசிகனே இவ்வுலகைக் காத்திடும் ஞானதேசிகனே. கலியுகத்தினில் வாழும் மக்களை கர்மவினை சேராமல் கருணையோடு நன்மக்களாய் உருவாக்கும் ஞானதேசிகா ஞானஅரசே அரங்கமகாதேசிகா அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலன் கருதி ஒளி சூட்சும நூல்தனையே **விளம்பி வருடம் தை மாதம் 9ம் நாள் 23.01.2019, புதன்கிழமையான** இன்றைய தினமதனிலே இதுவரை கூறி வந்த ஆழ்வார் பெருமக்களைத் தொடர்ந்து பஞ்சபாண்டர்வகளாகிய ஐவருள் மூத்தவரான தருமன் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் தருமர்.

உலகினில் எந்த இடத்தின் அறமாகிய தருமம் வளர்க்கப்படுகிறதோ அந்த இடத்தில் இயற்கை அழிவு இல்லாது இயற்கையும் மனம் மகிழ்ந்து புதுமையையும், பசுமை வளமும் மிகுந்து உண்மையுடன் அன்புமிக்க ஞானபூமியாக மாறும்.

உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, சுத்த சைவ உணவினை மேற்கொள்வதான அரங்கனின் நெறியாம் சைவநெறியினை, உண்மை ஆன்மீக ஞானமும் நேசமும்மிக்க ஞானிகளின் நெறியினை உலக மக்களெல்லாம் இனி வருங்காலங்களிலாவது ஏற்று கொள்வதுடன் வல்லமைமிக்க அரங்கமகா தேசிகனை ஞானகுருவாக ஏற்று அரங்கனை பின்தொடர்ந்திட உலகமெங்கும் சர்வபலம் உண்டாகுமப்பா.

ஞானிகளின் துணையுடன் மக்களுக்கு நம்பிக்கை, நன்னடத்தை, நற்செயல் எனும் உயர்நிலைகள் எல்லாம் உலகினில் பெருகிடும்.

உலகினில் நம்பிக்கையுடன் அரங்கனை பின்தொடர்ந்து வருபவர்கள் வானவர்களான ஞானிகளும் வியக்குமாறு உயர்வடைவார்கள். அரங்கனிடத்து வரங்கள் பல பெற்று ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்வார்கள்.

உலக மக்களே ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ளவும், தெய்வபலத்தினை பெறவும் தினமும் ஞானிகளை மனம் உருகி பூஜைகள் செய்து ஆற்றல் தருகின்ற அன்னதானத்தில் அனைவரும் இயன்ற அளவு பொருளுதவிகள் செய்து உலகின் எல்லா திசைகளிலும் சிறப்பான தருமத்தினை வளர்த்து சந்தேகம் இன்றி அரங்கனின் வழிபாட்டின் நெறியை ஏற்று அலட்சியம் காட்டாமல் பயபக்தியுடன் ஏற்று கடைப்பிடித்து அரங்கனை பின்தொடர்ந்திட அவரவர் உள்ளும் சுயநலம் நீங்கி பொதுநலம் பெருகி தன்னார்வ தொண்டுகள் உலகினில் பெருகி அரங்கன் தலைமையில் அரங்கனின் தொண்டர் படையும் பெருகி விரிந்து தடைகள் ஏதும் இல்லாத வகையில் நல்ல மாற்றங்களும் முன்னேற்றமும் உருவாகி தயவில் சிறந்த ஞான சேவைகளும் உலகமெலாம் பரந்து விரிந்து வளர்ந்து ஞானிகளாக ஆகும் வாய்ப்பினை உலகோர் அனைவருக்கும் கிடைத்திடுமப்பா.

**புண்ணியத்தின் மூலமாகத்தான் இவ்வுலகினில் கலியுக துன்பம் நீங்கி கலியுகமும் அரங்கன் அருளால் ஞானயுகமாக மாறிடும்** என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் தருமர்.

–சுபம்–